DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -17

| | | |
|---|---|---|
| Name | : திரு. பழனி | Caste: |
| Father's Name: | திரு. கோடிவர்ணம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 9th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 09.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிழக்கு தெருவில் வசித்து வருகிறேன். காசிநாதன், மகாலிங்கம், சுரேஷ், பிரபு, தர்மலிங்கம் ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் எனது பங்காளிகள். ஆஜர் எதிரிகளை தெரியும். ( சாட்சி எதிரிகளை அருகில் சென்று பார்த்துவிட்டு பின்னர் பதில் சொல்லுகிறார்). அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். எதிரிகளுக்கும், காசிநாதன் குடும்பத்தினருக்கும் பிரச்சனை இருந்ததா என்றால் ஓட்டுபோடுவது சம்மந்தமாக அவர்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது. ( விடைபொறுந்திய வினாவினை அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்பதாக எதிரி தரப்பு வழக்கறிஞர்களால் ஆட்சேபிக்கப்பட்டது ). அவர்களுக்குள் வாய்சண்டையாக இருந்து வந்தது.

இப்போதிலிருந்து சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு வெள்ளிகிழமையன்று நான் காடுவெட்டி ஊருக்கு சென்று மாட்டிற்கு புல் அறுத்துவிட்டு ஊருக்கு வந்தேன்.

அப்போது காலை 9.30 முதல் 10.00 மணி இருக்கும். அப்போது சுமார் 15 நபர்கள் ஒரு மனித தலையை தரையில் போட்டு உருட்டிகொண்டு வந்தார்கள். அது பிரபுவின் தலை என்று சொன்னார்கள். அதை பார்த்து நான் நெஞ்சடைத்து மிதிவண்டிலிருந்து புல்கட்டுடன் கீழே விழுந்துவிட்டேன்.

அப்போது 5 ஆம் வகுப்பு படித்துகொண்டிருந்த எனது மகள் என்னை எழுப்பி தண்ணீர் கொடுத்தார் நான் தண்ணீர் குடித்துவிட்டு நமக்கு எதற்கு வம்பு என்று சொல்லி எனது மாடுகளை அவிழ்த்து கொண்டு மேய்சலுக்கு கொண்டுசென்றுவிட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். இதைதான் சொன்னேன்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலிசார் விசாரணையில் எங்கள் ஊரில் கடந்த 2007 ஆம் ஆண்டு நடந்த தேசிங்குபாலன் கொலை சம்மந்தமாக காசிநாதன் குடும்பத்தினருக்கும், தேசிங்குபாலன் கோஸ்டியை சேர்ந்த திருஞானம் குடும்பத்தினர் அவரை சார்ந்தவர்களுக்கும் பகை இருந்து வந்ததாகவும், தேசிங்குபாலன் கொலை வழக்கிலிருந்து காசிநாதன் குடும்பத்தினர் ஜாமீனில் வெளிவந்ததிற்கு பிறகு எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், காளிதாஸ், பாரதிதாசன் மற்றும் அவரை சேர்ந்தவர்கள் அடிக்கடி கூடிபேசுவதாகவும், காசிநாதன் குடும்பத்தினரை கண்டால் திட்டுவதுமாகவும் இருந்து வந்ததாகவும், வழக்கு சம்பவ தினத்திற்கு 15 நாட்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு சுமார் 10.00 மணியளவில் நானும், எங்களது ஊரை சேர்ந்த தணிகாசலமும் எதிரி ரவிசந்திரனின் வீட்டின் வழியே வந்துகொ'ண்டிருந்தபோது அவரது வீட்டிற்குள் பேச்சு சத்தம் கேட்கவே நாங்கள் மறைந்து இருந்து உள்ளே என்ன நடக்கிறது என்று கவனித்ததாகவும், அந்தவீட்டிற்குள் எதிரிகள் பாரதிதாசன், திருஞானம், காளிதாஸ், பாபு, ஸ்ரீதர், விஜய், சசிகலா, கனகவள்ளி மற்றும் சிலர் உட்கார்ந்திருந்ததாகவும், எதிரி பாரதிதாசன் நம் திட்டம் வெற்றி பெறுவதற்கு இன்னும் சில நாட்கள் தான் இருக்கிறது,

தேசிங்குபாலனை கொன்ற பிரபு, தர்மலிங்கம், காசிநாதன் மற்றும் அவர்கள் குடும்பத்தை சார்ந்தவர்களின் தலையை எடுத்தால் தான் நம் தலைமைக்கு ஒருமரியாதை என்று ஆவேசத்துடன் பேசியதாகவும், அதற்கு மற்றவர்கள் விரைவில் வெற்றிபெறுவோம் என்று ஆவேசத்துடன் சொன்னதாகவும், அந்த விவரத்தை நானும், தணிகாசலமும் மறுதினம் காசிநாதன் மனைவி ஜானகியிடம் கூறி எச்சரிக்கையாக இருக்கும்படி சொன்னதாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

16.05.2008 அன்று காலை ராஜலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகிய நால்வரும் வண்ணாங்குளத்திற்கு சென்று குளித்துவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்ததாகவும், அப்போது வெட்டுங்கடா விடாதீங்கடா என்று சத்தம் கேட்டு நான் பார்த்தபோது எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், காளிதாஸ்,பழனிசாமி, ராஜதுரை, தினேஷ், திருவாளப்புத்துாரான் ரமேஷ், , சிலம்பரசன், பாஸ்கரன், சக்திவேல் மகன் ரமேஷ், பிரபாகரன், சுரேஷ், விஜய், ஜவகர்பாபு, ஸ்ரீதர், சசிகலா, கனகவள்ளி, ஆகியோர் அருவாள், கம்பு மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் ஏய் வெட்டுங்கடா அவன் குடும்பத்தில் எவனையும் விடாதீங்கடா என்று சொல்லிகொண்டு ராஜலிங்கத்தையும், மகாலிங்கத்தையும் துரத்திகொண்டு வந்ததாகவும், அப்போது ஜானகியும், காசிநாதனும் ஐயோ என் மகன்களை ஒன்றும் செய்யாதீங்கடா என்று கத்திகொண்டே போனதாகவும் அதற்குள் எதிரிகள் தினேசும், ராஜதுரையும் மகாலிங்கத்தை மாறிமாறி வெட்டி காமராஜ் வீட்டருகே போட்டுவிட்டதாகவும், சத்தம் கேட்டு ஓடிவந்த தர்மலிங்கத்தை பூராசாமி கடை அருகே வைத்து எதிரிகள் சக்திவேல் மகன் ரமேசும், பாஸ்கரனும் மாறிமாறி வெட்டியதாகவும், எதிரி ரமேஷ் தர்மலிங்கத்தின் தலையை ஒரே வெட்டாக வெட்டி தலையை தனியே எடுத்துவிட்டதாகவும், எதிரிகள் திருவாளப்புத்துார் ரமேசும், சிலம்பரசனும் ராஜலிங்கத்தை வெட்டபோன போது காசிநாதன் தடுத்ததாகவும், எதிரிகள் ரமேசும், சிலம்பரசனும் காசிநாதனை மாறி மாறி வெட்டி சாய்த்துவிட்டார்கள் என்றும் அப்போது என் புருசனை வெட்டாதீங்கடா என்று சொல்லிகொண்டு குறுக்கே வந்த சாட்சி ஜானகியை திருவாளப்புத்துார் ரமேஷ் பட்டா கத்தியால் தலை, முகம், இரண்டு கைகள் மற்றும் மார்பகங்களில் மாறிமாறி வெட்ட ஜானகி கீழே விழுந்துவிட்டதாகவும்,

அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஜானகியை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

இவ்வழக்கின் 5 ஆம் எதிரியான தினேஷ் என்பவர் எனது உடன் பிறந்த வேலுசாமி என்பவரது மகன் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையில் உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு 5 ஆம் எதிரி எனது தம்பி மகன் என்பதால் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

நான் சேலம் சிறார் நீதிமன்றத்தில் இளவர் எதிரிகள் பிரபாகரன், ராஜதுரை ஆகியோர்கள் மீதான வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த நீதிமன்றத்தில் நான் "சம்பவதினத்தன்று காலை சுமார் 10.30 மணிக்கு வந்துகொண்டிருந்ததாகவும், அப்போது எதிரிகள் ரமேஷ், பிரபு, திருஞானம் ஆகியோர் பிரபுவின் தலையை உருட்டி விளையாடிகொண்டு வந்தார்கள். அதனை பார்த்த எனக்கு நெஞ்சு அடைக்கிற மாதிரி இருந்ததால் வீட்டிற்கு சென்று படுத்துவிட்டேன்" என்று சொல்லியிருக்கிறேனா என்றால் அப்படி நான் சொல்லவில்லை. சாட்சியின் மேற்படி சாட்சி வாக்குமூலத்திலுள்ள மறுக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.18. ( சாட்சிகளின் வாக்குமூலங்கள் சிறார் நீதிகுழும CA.No.99/2023 மனு பிரகாரம் பெறப்பட்டுள்ளதாக அரசுதரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு)

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ரமேஷ், பிரபு, திருஞானம் ஆகியோர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் அவர்களை தெரியும். ஆனால் அவர்கள் தலையை உருட்டி கொண்டு வந்ததை நான் பார்க்கவில்லை.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge, Salem.